**செ.வெ.எண் :664** **நாள்: 11.10.2021**

# பத்திரிக்கை செய்தி

தஞ்சாவூர் மாவட்டத்தில், முதலாவதாக படிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் ஊரக உள்ளாட்சி தேர்தல்கள் நடத்தும் அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான கையேடு - 2இல் ஊரக உள்ளாட்சி தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்கு விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்துரைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக படிக்கப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்களின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தற்செயல் தேர்தல்கள் 2021இல் பதிவாகும் வாக்குகளை எண்ணுவதற்கு வாக்கு எண்ணிக்கை மையங்களை தேர்வு செய்து கீழ்க்கண்ட விபரப்படி வாக்கு எண்ணும் மையங்கள் அமைத்திட ஆணையிடப்படுகிறது.

தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஊராட்சிஒன்றிய கூட்ட அறையிலும், திருவையாறு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஊராட்சி ஒன்றிய கூட்ட அறை முதல் தளத்திலும், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், பொதுப் பிரிவு (கணினி) அறை தரை தளத்திலும், திருவோணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஊராட்சி ஒன்றியக் குழு கூட்ட அறையிலும், கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஊராட்சி ஒன்றிய குழு கூட்டம் அறையிலும், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஊராட்சி ஒன்றிய குழு கூட்ட அறை தரை தளத்திலும், பாபநாசம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஊராட்சி ஒன்றிய குழு கூட்ட அறையிலும், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு வாக்கு எண்ணும் மையமான, பூண்டி ஆர். வீரய்யா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரியிலும், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஊராட்சி ஒன்றிய குழு கூட்டம் அறையிலும், பேராவூரணி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கூட்ட அறையிலும், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஊராட்சி ஒன்றிய குழு கூட்ட அறையிலும், மேற்கண்ட விவரப்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் காலியாக உள்ள பதவி இடங்களுக்கான தற்செயல் தேர்தல்கள் நடைபெற்ற 11 ஊராட்சி ஒன்றியங்கள் மேலே காணும் விவரப்படி 11 வாக்கு எண்ணிக்கை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வாக்கு எண்ணிக்கை மையங்களில் நாளை (12.10.2021) வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.

மேற்கண்ட தகவல்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**